# யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட வளவில் போதனு வைத்தியசாலை அமைக்க முயற்சி

(கொழும்பு)

யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்துடன் சேர்ந்து போதனுவைத்தியசாலை அமைப்பது தொடர்பான முயற்சிகள் கொழும்பில் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இப் போதனு வைத்தியசாலை ஜப்பான் நாட்டின் உதவியுடனே அமையும், இதற் கான திட்டங்கள் யாவும் தயாரிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவும் கொள்கைத் திட் டமிடல் அமைச்சும் இதற்கான அனுமதியை வழங் கியுள்ளது. சுகாதார அமைச்சு இத்திட்டத்திற்கான அனுமதியை இது வரை வழங்கவில்லை, இதற்கான முயற்சிகளே தற்போது அமைச்சுவட்டாரத்தில் மேற் கொள்ளப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (03

பக்கங்கள் ஆறு விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 ஒளி 71 திங்கள் 16-04-1990 (சித்திரை 03) ரமழான் 19



(திருச்சி)

ஜனுதிபதி பிரேமதாஸவும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே: பிரபாகரனும் விரைவில் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்த வுள்ளனர் இத்தகவலை நேற்று கைத்தொழில இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி திருச்சியில் நடைபெற்ற நிருபர் கள் மாநாட்டில் தெரிவித்தார் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் தற்போது நடைபெறறு வரும் பேச்சு களும் இருதலைவர்களிடையேயும் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தைகளும் இலங்கை இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்து விடும் எனத்தாம் நம்புவதாகவும் அமைச்சர் கூறிஞர்.



# ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே

# தமிழர்களை திருப்பி அனுப்ப முயற்சி

ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே நாடுகளிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை மீளத் தாயகம் அனுப்புவதற்கு அந்நாட்டு அரசுகள் முயற்சி எடுத்துவருகின்றன.

இந்த நாடுகளிலுள்ள பல இலங்கைத் தமிழ் அகதிக ளின் வழக்குகள் இடைநிறுத் தப்பட்டுள்ளன,

இதேசமயம பல அகதிக ளுக்கு நாடு திரும்ப கால அவகாசமும் வழங்கப்பட்டு அறிவுறுத்தல் கடிதங்களும் வழங்கப்பட்டுள்ளனவாம்.

இலங்கையில் நிலைமை சீரா னதாலேயே மேற்படி நடவ டிக்கைகளை மேற் கொண்டுள் ளதாகத் தெரியவருகிறது-

இதனுல் ஜேர்மனி, பிரான்ஸ் நோர்வே போன்ற நாடுகளி லுள்ள தமிழ் அகதிகள் கனடா இத்தாலி. சுவிஸ் போன்ற குடியேற்ற நாடுகளுக்குக் கள்ளமாக இடம்மாறுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது,

## வெளிநாட்டு தமிழர்கள் நாடு திரும்ப முடியாத நிலை

வெளிநாடுகளில் உள்ள பல தமிழர்கள் அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட இலங்கைக்கு வரமுடியாதநிலை யில் உள்ளதாக தெரியவந்துள்ளது. பாஸ்போட் மோசடி செய்தவர்களும் தலைமாற்றி வெளிநாடு சென்றவர்களுமே மேற்படி பாதிப்படைந்து வரு கின்ருர்கள். பெற்ருேர்களின் மரணச்சடங்குகள் உடன் பிறப்புகளின் மரணச்சடங்குகள் போன்ற அத்தியாவ சியதேவைகளில் கூட இவர்கள் கலந்து கொள்ள முடியாமல் தவிக்கின்ருர்களாம். (03)

## அன்னை பூபதி நினைவாக தென்மராட்சி எழுச்சி ஊர்வலம்

நேற்று முன் தினம் மிருசு வில் பகுதியில் இருந்து சாவ கச்சேரி வரை மாபெரும் எழுச்சி ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. அன்னை பூபதி நினைவாகதென்மராட்சிப்பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப் பட்ட இவ்வூர்வலம் மிருசு வில் புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள நினைவுஸ்தூபி யில் இருந்து ஆரம்பமானது.

சுமார் ஐம்பதாயிரம் பேர் கலந்து கொண்ட இந்த ஊர் வலத்தில் பல சித்தரிப்பு ஊர்தி களும் சென்றன.

கடந்த சில வருடங்களாக மக்களுக்கு இழைக்கப்ப ட்ட

— 6 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.உ. அ. அதிபர் பிரிவு

## தமிழ் சிங்கள புத்தாண்டு விழா நேற்று சிறப்பாக நடந்தது

நேற்று யாழ் உதவி அர சாங்க அதிபர் பிரிவின் தமிழ் சிங்கள புத்தாண்டு விழா யாழ் மத்திய கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு யாழ் உதவி அரச அதிபர் திரு க. சபாபதிப் பிள்ளை தலைமை தாங்கிஞர்,

பிரதம விருந்தினராக யாழ் அரசஅதிபர் திரு அன்ரன் அல் பிரட் கலந்து கொண்டார், யாழ்மாநகர சபை ஆணையா ளர் திரு வீ, பி, பாலசிங்கம். விழாவை ஆரம்பித்துவைத்தார்

விழாவில் விளையாட்டுப் போட்டிகள் உட்பட கலை கலாச்சாரநிகழ்ச்சிகளும்இடம் பெற்றன. திருமதி அன்ரன் அல்பிரட் வெற்றியடைந்தவர் களுக்கு பரிசில்களை வழங்கிஞர்

## கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி புலேந்திரன் இன்று வன்னியில்உயர் அதிகாரிகளுடன்சந்திப்பு

கல்வி இராஜாங்க அமைச் சர் திருமதி ராஜமனேகரி புலேந்திரன் இன்று திங்கட் கிழமை வவுனியா வருகின்ருர்

அமைச்சர் பதவியினை ஏற்ற பின்பு முதல் தடவையாக தனது தொகுதிக்கு வரும் இவருக்கு மகத்தான வரவேற் பளிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது என தெரியவரு கின்றது

இன்று திங்கட்கிழமை காலை வவுனியா கச்சேரியில் வைத்து வவுனியா மாவட்ட உயர் அதிகாரிகளுடைய மகாநாடு ஒன்றினை நடத்தவுள்ளார்.

கல்வி தொடர்பான பிரச்

— 6 ம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு. வாழைச்சேனை பொலிஸ் நிலைய 45 பொலிஸார் தெற்கிற்கு அனுப்பப்பட்டனர்

மட்டக்களப்பு, வாழைச் சேனை ஆகிய பொலிஸ் நிலை யங்களில் கடமையாற்றிய நாற்பத்தி ஐந்து பொலி ஸார் நேற்று தென்னிலங் கைக்கு அனுப்பப்பட்டனர். புத்தாண்டு தினத்தன்று பொதுமக்கள் மீது அடாவ டித்தனம் புரிந்தமையில் ஈடு பட்டதாக கருதப்படும் பொலிஸாரே இவ்வாறு இட மாற்றத்திற்குள்ளாஞர்கள்; இதேசமயம் நேற்று மட்டக் களப்பில் விடுதலைப்புலிக ளின் பிரதிநிதிகளுக்கும் பொலிஸ் உயர் அதிகாரி களுக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற் றன, பேச்சுகளின் போது மட்டக்களப்பு, வாழைச் சேனை பொலிஸார் செய்த அடாவடித்தனங்கள் குறித் து பிரஸ்தாபிக்கப்பட்டதாக தெரியவருகிறதுமட்டக்களப் பில் நேற்று வீதி போக்கு வரத்து கடமைகளிலோ பாதுகாப்பு போன்ற நடவ டிக்கைகளிலோ ஈடுபடவில்லை வெளியிடங்களிலும் பொலி ஸாரை காணமுடிய வில்லை (03)

# இளைஞர் சேவைமன்றத்தின் மூலம் ஜப்பான் உதவி வழங்கும்

யப்பான் நாட்டின் பிரபல வர்த்தகர்கள் இருவர் இலங்கை இளைஞர் சேவை மன்றத்திற்கு நிதி உதவியும் பொருளுதவியும் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இலங்கை வந்த யப்பான் வர்த்தகப் பிரமுகர்கள் திரு. மிற்சுயி ஒகசாவா, திரு. யோகிரோ மோறி ஆகிய இருவரும் இலங்கை இளைஞர் சேவை ஆதாரமையத்தின் செயலாளர் நாயகம் திரு. ஸ்ரீலால் கல்டெராவுடன் நடத்திய கலந்துரையாடலின்போது இளைஞர் விவாகாரங்களுக்கு உதவி தேவை என விடுத்த வேண்டுகோளை அடுத்து தங்கள் வர்த்தகர் சம்மேளனம் மூலம் பல உதவிகளைச் செய்ய முடியும் என தெரிவித்துள்ளனர்.

முதற் கட்டமாக இலங்கை இளைஞர் விவகார ஆதார நிலையம் நடத்தும் விஞ்ஞான நிலையத்தின் ஆய்வு கூடத்திற்கு, கணனி இயந்திரம், மின் தட்டச்சு, போட்டோ ஸ்ரேற் இயந்திரம் கட்புல சாதனத்தொகுதி என்பவற்றை வழங்கவும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு பாடசாலை பின்ளைகட்கும் சர்வகலாசாலை செல்லும் மாணவர்களுக்கும் பஸ் சேவை நடத்த 50 பஸ் வண்டிகளும் அதற்கு வேண்டிய உதிரிப்பாகங்களும் வழங்குவதாகவும் உறுதியளிக்கப் பட்டுள்ளது.

இவற்றுடன் வைத்தியசாலைகளில் பாவிப்பிற்காக பாவித்த ஆனல் நல்ல நிலையில் நீண்ட காலம் உழைக்கக் கூடிய 30 அம்புலன்ஸ் வண்டிகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அடுத்த கட்டத்தில் 1991-ல் இருந்து வருடாந்தம் 100 இலங்கை இளைஞர்களுக்கு விஞ்ஞான தொழில்நுட்ப பயிற்சிகள் யப்பான் நாட்டிற்கு அழைத்து வழங்குவோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

யப்பான் நாட்டிற்கு பயிற்சிக்கு தெரிந்து எடுக்கப்படும் வாலிப பயிலுநர்கள் திறமையாகவும் முழுமையாகவும் பயிற்சியை மேற்கொண்டு தமது திறன்களை உச்சமாக வளர்த்துக்கொண்டால், அங்கு வேலை வழங்கக் கூடிய சாத்தியங்கள் இருக்கும் பட்சத்தில் பொருத்தமானவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்க முயற்சிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# புல்லுமலை, கரடியனறு பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன

கிழக்கில் புல்லுமலை, கரடியனறு ஆகிய இரு இடங்களிலும் இயங்கிவந்த பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் — அரசு பேச்சுவார்த்தைகளின் பயனாகவே இந்த இரு நிலையங்களும் மூடப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்திலுள்ள 'மல்வத்தை' இராணுவ முகாமிலிருந்துபுறப்பட்ட இராணுவ அணியொன்று நடந்து கொண்ட விதம் குறித்தும் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

# மாகாணசபை அமைச்சர்களின் பாதுகாப்பு அலவுன்ஸ் நிறுத்தம்

வடகிழக்கு மாகாணசபையின் அமைச்சர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பாதுகாப்பு வீரர்களுக்கு மார்ச் முதலாம் திகதிமுதல் சம்பளம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

வட கிழக்கு மாகாண சபை மந்திரிகளுக்கு தலா ஐந்து பாதுகாப்பு வீரர்களை மத்திய அரசு அமர்த்தியிருந்தது. இவர்களுக்கான ஊதியம் அலவன்ஸ், மேலதிக கொடுப்பனவு என்பனவற்றையும் மத்திய அரசே வழங்கிவந்தது.

அரசின் இந்த முடிவை மாகாண போக்குவரத்துத் துறை அமைச்சர் அபுயூசுப் கண்டித்துள்ளார். இதே சமயம் வடகிழக்கு மாகாண சபையின் ஒரேயொரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான மசூர் மௌலானாவின் பாதுகாப்பும் நிறுத்தப்பட்டு விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## போக்குவரத்துச் சபைக்கு

# எரிபொருள் கடன் வழங்க பெ. கூட்டுத்தாபனம் மறுப்பு

கடன் வழங்கப்படாத நிலையில் போக்குவரத்துச் சேவைகளை நடாத்த முடியாமல் இருப்பதால் மீண்டும் கடன் வசதிகளை வழங்குமாறு இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை விடுத்த வேண்டுகோளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிராகரித்துள்ளது.

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை கடந்த 18 மாத காலமாக 13 கோடி 20 இலட்சம் ரூபாவைக் பெற்றோலியக் கூட்டுசதாபனத்துக்கு எரிபொருள்கட்டணமாகச் செலுத்த வேண்டியுள்ளது. இதன் விளைவாகவே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென அறிவித்துள்ளதுடன் கடன் வசதிகளையும் ரத்துச் செய்துள்ளது.

போக்குவரத்துச் சபை வருடமொன்றுக்கு 80 கோடி ரூபா பெறுமதியான எரிபொருளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் வாங்குகின்றது

## சமாதான சபை அமைப்பு

கிளிநொச்சி கண்டி வீதியின் மேற்குப் புறமாக உள்ள பகுதியில் வாழும் மக்களுக்காக, அப்பகுதியில் நடைபெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும், அது சம்பந்தமான விசாரணைகளை நடத்துவதற்காகவும் ஒரு சமாதான சபை அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வசிக்கும் மக்கள் தமது புகார்களைக் கிளிநொச்சி மக்கள் குரல் பணிமனையில் ஒப்படைக்கும்படி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் கேட்டுள்ளனர்.

## புதுவருட அன்பளிப்பு

புதுவருட அன்பளிப்பாக மில்க்வைற் தாபனம் சுவாமி சிவானந்தர் அருளிய "உலகப் பொதுப் பிரார்த்தனை" யின் ஆங்கில மூலமும் தமிழாக்கமும் கொண்ட பிரசுரமும் ஒரே கடவுள் ஒரே உலகம் ஒரே மனித இனம் என முழங்கி அண்மையில் அமரத்துவம் அடைந்த கவியோகி சுத்தானந்த பாரதி அவர்களின் திருவுருவப்படமும், தெளிவான விலாசத்துடன் ரூ2/-முத்திரை அனுப்பி வைப்பவர்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகாராணியார் மகிழ்ச்சி

இலங்கையில் இடம் பெறும் முனனேற்ற நிகழ்வுகள்குறித்து தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், அங்கே இருந்து கிடைக்கும் செய்திகள் தமக்கு மகிழ்ச்சியைத்தருகின்றதென்றும், இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகர் ஜெனரல் சேபால ஆட்டிக்கலையை கடந்த வெள்ளியன்று சந்தித்த போது இரண்டாவது எலிசபெத் மகாராணி தமது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டார்.

# ஓய்வூதியர் சங்கத்தின் நஷ்ட ஈடு கோரிக்கை

வடமாகாணத்தில் கடந்த காலங்களில் நிகழ்ந்த இராணுவ நடவடிக்கையின்போது ஒய்வூதியக்காரர்களின் வீடுகள் சேதமாக்கப்பட்டதற்கு இது வரை எவ்வித நஷ்ட ஈடும் வழங்காதபடியால் இது விடயத்தில் உடன் நடவடிக்கை மேற்கொண்டு அதை வழங்குமாறு வடமாகாண அரசாங்க ஓய்வூதியக்காரர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இச்சங்கத் தலைவர் திரு. வி எப் இராமநாதன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் புனருத்தாரண அடையாள அட்டைகளில் பகுதி 2, 3, 4, சதுரங்களில் புள்ளியிடப்படாதவர்களே இந்த நஷ்ட ஈட்டுக்குத்தகுதியுடையவராவர் எனக் கருதியபடியால் இத்தகுதியுடையோர் தங்கள் புனருத்தாரண அடையாள அட்டையுடன் பெயர்களை வடமாகாண அரசாங்க ஓய்வூதியச் சங்கம், இல: 418, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் இம்மாதம் இருபதாம் திகதிக்குமுன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

# விமானப் படையில் நிரந்தர அலுவலர் ஆட்சேர்ப்பு

இலங்கை விமானப்படையில் நிரந்தர அலுவலருக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப தாரிகள் 18வயதுக்கும் 22 வயதுக்கும்இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஒரே தடவையில்ஆறுபாடங்களில் சிங்களம் அல்லது தமிழ் மொழியுடனும் ஆங்கிலத்தையும் உள்ளடக்கி சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் 06 04 90வெளியான வர்த்தமானி பத்திரிகையில் உள்ளது.


## தியாக தீபம் அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி



ஈழமண்ணின் சரித்திரத்திலே
என்றும் நிலைக்கும் பூபதி நாமம்
வாழும் நாளில் உமது நாமம்
வாழ்த்தி வாழ்த்தி மகிழ்வார் தமிழர்

'செல்விகள்' மாத்திரம் சிலிர்த்து எழவில்லைத்
'திருமதி' கட்டும் உணர்ச்சி உண்டென
நல்ல விதமாய் நோன்பு செய்தே புகழுடல்
நாட்டினுர் திருமதி கணபதிப்பிள்ளை

மட்டு நகரும் யாழ்நகருடனே
தொட்டுக் கரங் குலுக்கியே நிற்கும் என்று
எட்டுத் திசையும் எண்ணி மகிழ்ந்திட
விட்டு உயிரை விண்ணக மேவினீர் தாயே!

பண்டத்தரிப்பு பரிஷ் தெங்குபனம் பொருள்
உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்
பண்டத்தரிப்பு

04144

## சிறு விளம்பரம்

தேவை

மின் தறி நெசவில் குறைந்தது 2 வருட அநுபவம் உள்ள பெண் நெசவாளர் உடன் தேவை. நேரில் வரவும். யூனியன் பவர் லூம், 190ஆம் கட்டையடி, நுணுவில், சாவகச்சேரி.

(04111)

## A/L Physics

ஆசிரியர்

**R. சத்தியசீலன்**

B. M. C முன்னேன்

யாழ்ப்பாணம்

A/L 90 (Mon to Fri)

8. 30 a. m வெப்பவியல்
9 30 a.m மீற்றர்ப் பாலம்
4. 30 p. m ஒளியியல்

ஆரம்பம்: 18. 04 90
புதன்கிழமை காலை
8. 30 மணி

04152

## "M" THREE TRAVELS

வழங்கும் சவூதி அரேபியா பிரயாணம்

| | Vacancy |
|---|---|
| Executive Secretary [நிர்வாக காரியதரிசி] | 2 |
| Accountant | 2 |
| Chartered Accountant | 2 |
| Auto Mechanic | 20 |
| Diesel Meehanic | 10 |
| Radio Tehnician | 10 |
| 1st Class Cook | 20 |
| Cook (Western) | 20 |

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கான சம்பள விபரம் நேர்முகப்பரீட்சையில் தெரிவிக்கப்படும்.

இவற்றிற்கு நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

## "M" Three Travels

தலைமையலுவலகம்
"இந்திரபவனம்"
சோதி வீதி
காங்கேசன்துறை.

கிளையலுவலகம்
இல. 1, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்

04158

# அறிஞர்கள் அனைவரும் அங்கிருந்து வருக

இலங்கையின் கடந்தகால வன்செயல்கள் பல அறிஞர்களை இலங்கையைவிட்டே ஓடச் செய்தது.

தமிழர்கள், மட்டுமன்றிச் சிங்களவர்களும் இதில் அடங்குவர்.

பட்டதாரிகள், டாக்டர்கள், விஞ்ஞானிகள், உயர் அதிகாரிகள், கட்டடக் கலைஞர்கள்.........

என்று ஒரு பெரும் பட்டியலே இதில் உண்டு.

தமிழர்களில் பெரும் பகுதியினர் தெற்கில் இடம்பெற்ற இனக்கலவரங்களாலும், வடக்கில் இடம் பெற்ற அசம்பாவிதங்களாலும் வெளியேறினர்.

சிங்களவர்கள் அநேகமானோர் கடந்த ஓரிரு வருடங்களிலேயே வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தனர்.

அறிஞர்கள் வெளியேற்றத்தில் பெரும் பகுதியினர் தமது பணச் சம்பாத்தியத்திற்காகவே வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் இலங்கையின் ஸ்திரமற்ற நெருக்கடி நிலையைத் தமக்குச் சாதகமாகப் பாவித்த புத்திஜீவிகளாவர்.

இவர்கள் மட்டுமல்ல இன்னுமொரு பகுதி அறிஞர்களும் வெளிநாடுகளில் தங்கியுள்ளனர்.

## இதயநாதம்

திங்கட்கிழமை 16-04-1990

நல்வாக்கு

இறந்தோர் இருப்போருக்குப் படிப்பினை ஆகின்றார்கள்.

ஹஸரத் அலி(றலி)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

இவர்கள் இலங்கையிலிருந்து உயர்கல்வி பெறுவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள்.

அனைவரும் அநேகமாக புலமைப்பரிசில் பெற்றே சென்றவர்கள்.

இப்படி உயர்கல்விக்காகப் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்றவர்களில் எழுபத்தைந்து வீதமானவர்கள் திரும்பி வரவேயில்லை.

இதில் கவலைக்குரியவிடயம் ஒன்று உண்டு.

இப்படிச்சென்று திரும்பாத எழுபத்தைந்து வீதமானவர்களில் பெரும்பகுதியினர் தமிழர்கள்.

வரிக்குவரி மக்களின் வரிப்பணத்தில் படித்தவர்கள் இவர்கள்.

இவர்கள் இன்று தமது படிப்பறிவை வேறு நாடுகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.

தவம் கிடப்பது ஒருவன் வரம் வாங்குவது இன்னொருவன் என்பதுபோல், இவர்களை முன்னேற்றிய இலங்கை மக்களைவிட வேறுநாட்டு மக்களே அதிக பயன் அடைகின்றனர்.

இவர்களின் வெளியேற்றத்தால் நாடு அடைந்த நஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல.

பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் பல இடைநடுவில் நிறுத்தப்பட்டன.

பல திட்டங்கள் மந்தகதியில் நடைபெறுகின்றன.

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளிற் பெரும் வைத்தியப்பற்றுக்குறை நிலவுகின்றது.

குறிப்பாக வடக்கு-கிழக்கில் உள்ள வைத்தியசாலைகளில் டாக்டர்களுக்கும், நிபுணர்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் புலமைப்பரிசில் பெற்றுப் போனவர்கள் வெளிநாடுகளிலிருந்து இன்னமும் திரும்பாததால் அரசும் புதிதாகப் புலமைப் பரிசில் வழங்கப் பின் நிற்கின்றது.

இதனால், பலருக்குக்கிடைக்க வேண்டியநல்ல உயர்கல்விச் சந்தர்ப்பம் நட்டிப் போகிறது.

மேலும் இங்கிருந்து வெளிநாடு சென்ற அறிஞர்கள் தமது தரத்திற்குக் குறைவான, மிகவும் கீழான பதவிகளிலேயே பணம் சம்பாதிக்கும் நோக்குடன் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

இன்றைய நாட்டின் சுமுக நிலையை மனதிற் கொண்டு இவர்கள் அனைவரும் உடன் திரும்பி வருவது அவசியமும், அவசரமுமாகும்.

## நாட்டுயர்வு பேணும் அபிவிருத்தியில்...

# அகன்ற பார்வை அவசியம்

# பேதம் எனின் அது பேதமையே

**தமிழர்தம் தாயகபூமி நீர், நில வளம் பெற்றது. நாடளாவிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகையில் முன்னைய காலங்களைப்போல் இத் தி மண் புறக்கணிக்கப்படலாகாது. இம்மண்ணின் வளம் வலுப்பட வரைவில்லாத தூரித நோக்கே தேவையாகின்றது.**

தமிழர்தம் தாயக பூமியான வடக்கு கிழக்கு மாகாணம் பல்வேறு செழுமைகளையும் உள்ளடக்கிய பகுதி. இங்கே வாழும் மக்கள் பரந்துபட்ட சிந்தனையுடன் கடின உழைப்பு ஒன்றையே மூலதனமாகக் கொண்டு வளமான வாழ்வுக்காக தம் நேரத்தை பயன்உள்ளதாக்கிக் கொள்பவர்கள்.

குறுகிய பேதங்களுக்கு உட்படாமல் இந்நாட்டின் (தமிழீழத்தின்) உயர்வுக்காக, ஒற்றுமைக்காக உளப் பூர்வமாகப் பாடுபடும், போராடும் மக்கள் இயக்கத்தின் பக்கம் நிற்பவர்கள் இம்மக்கள்.

நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றகாலகட்டம் பேறு மிகக் கொண்டது. பெருமை செறிந்தது.

இந்த புண்ய மண்ணை கபடமும் சூழ்ச்சியும் கொண்ட அந்நியர் ஆக்கிரமித்த வேளை அவர்களை வீரத்துடன் எதிர்த்துப் போராடி அவர்களைப் புறமுதுகிட்டோடச் செய்திட்ட அஞ்சா நெஞ்சினரைத் தன் தலைமையிலான போராளிகளாகக் கொண்ட **மாவீரன்**

பாரம்பரிய பண்பாடு மிக்க மக்களைக் கொண்ட இத்திரு மண்ணில் குறுகிய மனப்போக்குக்கு இடமிடையாது, நீதி, நேர்மை, உண்மைஆகியவையே இங்கு நிலை பெறமுடியும் என்பதினை உறுதிப்படுத்திய **உத்தமன்**

வனத்தில் வாழும் சூழ்நிலை உருவாகிய வேளையிலும் என் தமிழ், என் மக்கள் என்ற வாஞ்சைமிகு நெஞ்சத்துடன் துணிவையும், ஆழமான மதிநுட்பத்தையும், மாற்றாரும் வியக்கும் அற்புதப் போர்த் தந்திரத்தையும் கொண்டு செயற்படும் **சாணக்கியன**

என் அணியில் உள்ள போராளிகள் இராணுவம் அல்ல, அவர்களை மக்களின் குழந்தைகள் என்றே வர்ணிப்பேன் எனத் திறந்த, திண்ணிய இதயத்துடன் பகரும் கனிவான **கருத்துள்ளவன்**

உழைத்துவாழ வக்கற்று, போலித்தனத்தைக் கொள்கையாகக் கொண்டோரிலிருந்து வேறுபட்டு அப்பழுக்கற்ற தியாக உள்ளத்துடன் மக்களுடன் மக்களாக இணைந்து அவர்களில் ஒருவனாக வாழ்கின்ற **நேயநெஞ்சினன்**

மூகிழ்த்தெழும் தமிழினத்தின் முழுமதி வேலுப்பிள்ளை பிரபாகரன் என்னும் மாபெரும் சக்தியை, வீரத்திற்கு இலக்கணம் வகுத்திட்ட தேசியத் தலைவனின் வழி காட்டுதலை ஏற்று மக்கள் வாழும் **பொற்காலம்** இது.

இத்தருணத்தில் வடக்கு-கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியைப்பற்றிக் கருத்தைச் செலுத்த வேண்டியது மிக, மிக அவசியமாகிறது.

அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பகுதிகள் இங்கு பலப்பல இருப்பினும் வெளிப் பகுதி மக்களையும் பெரிதும் ஈர்க்கும் வடக்கின் தொன்மைமிகு சிறப்புக்குச் சட்டியங் கூறி மிளிரும் கீரிமலைப் புண்ய ஸ்தலத்தை சற்றே இவ்வேளை நோக்குவோம்.

சரித்திரப் பிரசித்திபெற்ற இவ்விடம் இன்று கவனிப்பாரற்ற நிலையில் செம்மையற்று, சோபையிழந்து வளம் குன்றிக் காணப்படுகின்றது.

சமீபத்தில் ஏற்பட்ட இருள் சூழ்ந்த காலத்திற்கு முன்னர் இப்பகுதி பெற்றிருந்த பிரபல்யம நாடறிந்தது. இன, மத பேதமற்று இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் இருந்து பெருவாரியான மக்கள் இங்கு அலைகடலெனத் திரண்டுவந்து திவ்யம் பெற்ற காட்சி கண்டோம், களிப்படைந்தோம்.

ஆனல் இன்றோ இப்பகுதி எழில் குன்றி ஒளியின்றிக் காட்சியளிக்கிறது.

கடந்த பல வருடங்களுக்கு முன் இங்கு பல இலட்சம் ரூபா செலவில் அழகான மண்டபம் ஒன்றினைப் பெரும் ஆர

**கே. வி. ஆர். ஸ்ரீ**

வாரத்தின் மத்தியில் திறந்து வைத்த அன்றைய பிரதமரும் இன்றைய ஜனாதிபதியுமான திரு. ஆர் பிரேமதாஸ கீரிமலையின் கீர்த்தி மேலும் விளங்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்திருந்தார். தனக்குப் பால்ய கால நண்பர்களாக இருப்பவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களே என்று சொல்லி அவ்வேளை பெருமையுமுற்றார்.

ஆனல் காட்டாற்று வெள்ளம் போலான காலஓட்டத்தில் நிலைமை எப்படியெல்லாமோ மாறிவிட்டது.

இப்போது உல்லாசப் பயணத்துறைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார் திரு. எஸ். தொண்டமானி

கடந்த சில வாரங்களுக்கு முன் நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஜனாதிபதி பேசுகையில்' உல்லாசப் பயணதுறை அமைச்சையும்திரு தொண்டமானிடமே நான் ஏன் கொடுத்திருக்கிறேன் ஏனென்றால் அவர் வெளிநாடுகளிலும் எமது நாட்டின் உல்லாசத்துறை வளத்தைச் செப்பி எமக்குப் பெரும் வருவாயைத் தேடித் தரவல்லவர் என்று புகழாரம் சூட்டியிருந்தார்.

எனவே தென்னிலங்கையில் உல்லாசப் பயணத்துறையை வளர்ச்சி பெறச்செய்கையில் வடக்கின் வளமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அத்தியாவசியமாகும்.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெருமளவில் இலங்கைக்கு வர ஆரம்பித்துள்ளனர். என்றும் ஏறத்தாழ 93% வீதத்தால் அதிகரித்துள்ள உல்லாசப் பயணிகளின் வருகைத் தொகை சென்றவருடத்தின் முதல் மூன்று மாதங்களில 47, 338 இலிருந்து இவ்வருடத்தின் இதே காலப்பகுதியில் 79, 996 ஆக அதிகரித்துள்ளது. என்றும் இத்துரித கதியிலான இலங்கை உல்லாசப் பயணத்துறை முன்னேற்றம், உலக உல்லாசப் பயணத்துறை முகவர்களைத் திருப்தியும் நம்பிக்கையும் அளிக்க வைத்துள்ளது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தென்னிந்தியாவுக்கு அபிவிருத்தியில் வடக்கில் மத்திய அரசு பாரபட்சம் காட்டியதனல் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது, என்று தென்னாட்டார் ஒருகாலத்தில் கண்டனக் குரல் எழுப்பினர்.

அதுபோல் இன்று 'தெற்கு வாழ்கிறது, வடக்குத் தேய்கிறதுஎன்றகண்டனக்குரல் இனிமேலும் எழ வேண்டாம் அந்த அவதூறு ஏற்படாதிருக்க வேண்டுமானல் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது எண்ணம் தெளிவுள்ளதாக இருக்க வேண்டும், இருக்கும் என எதிர்பார்ப்போம்

# பூநகரி மன்னர் வீதியில் சிமெந்திலான வீதி அமைப்பு

சிமெந்திலான வீதி அமைக்கும் பரீட்சார்த்த நடவடிக்கை ஒன்று பூநகரி மன்னர் வீதியில் மேற் கொள்ளப் படவுள்ளது. வீதிஅபிவிருத்தி அதிகார சபை. இதற்கென 225 அடி நீளமான வீதியை தெரிவு செய்துள்ளது.

களிமண், மணல், சிமெந்து போன்ற கலவையினல் இவ்வீதி அமைக்கப்படும் இந்த நடவடிக்கைக்கு ஏற்படும் செலவு மற்றும் இதன் பராவனைக் காலம்போன்றவை மேற்படி பரீட்ச்சார்த்த நடவடிக்கையில் அவதானிக்கப்படும்.

மேற்படி பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றியளிக்குமானல் முக்கிய வீதிகள் யாவும் சிமெந்தினல் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டது.(03)

# மழைக்கும் பாடசாலையில் ஒதுங்காத பிள்ளைகள்

பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வயதில் பாடசாலைப் படிக்கட்டுகளையே பார்க்காத பல சிறுவர்கள் இன்னமும் இருக்கின்றனர். என்று கொழும்பு மாநகர சபை நடத்திய ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்ள்ளது.

அத்துடன் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களில் பலர்தமதுதாய் மொழியிலேயே பெரும் இலக்கணப் பிழைகளை விடுகின்றனர் என்றும் இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

வயது வந்த சில மாணவர்களுக்கு அரிச்சுவடியே தெரியாதென்றும் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# போதைவஸ்து கடத்தல் முதலிடம் தமிழருக்கு

போதைவஸ்துக் கடத்தல் தொடர்பாகக் கடந்தவருடம் 48 இலங்கையர் வெளிநாடுகளில் சிக்கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 18பேர் இத்தாலியில் கைது செய்யப்பட்டனர்.

பிரான்ஸில் ஆறுபேரும், சுவீடனில் ஆறுபேரும் பிடிபட்டனர். இவர்களில் 35 பேர் தமிழர், 9 பேர் சிங்களவர், இருவர் பறங்கியர், இருவர் முஸ்லிம்கள்.

# மலைபோல் மக்களாதரவு; எம்மை அழிக்க எச்சக்தியாலும் முடியாது


- மன்னார் சுபன்

மக்களாதரவு மலைபோன்று இருக்கின்றது. அது இருக்கும் வரை எமது போராட்டத்தை எச்சக்தியாலும் அழிக்க முடியாது'' என்று விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட இராணுவத் தளபதி திரு. சுபன் கூறினார்.

''கடந்த காலங்களில் எமது ஆயுதப் போராட்டத்திற்கு எவ்வாறு எமது மக்கள் ஆதரவு அளித்தார்களோ ஜனநாயக நீரோட்டத்தில் கலந்திருக்கும் இவ்வேளையிலும் அதேபோன்று ஆதரவை மேலும் மேலும் தந்து கொண்டேயிருக்கின்றனர்.

நாம் ஆள்வதற்கு ஆயுதம் ஏந்தவில்லை. எமது எதிர்கால சந்ததி நின்மதியாகத் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காகவே ஆயுதப் போராட்டம் நடத்துகின்றோம்'' என்றும் அவர் சொன்னார்.

## 'கப்டன் பிரபாகரன்'



தலைவர் திரு. வி. பிரபாகரனின் புகழ்க் கொடி இப்போ தெல்லாம் சர்வதேசரீதியில் பறக்கிறதல்லவா? தென்னிந்தியத் திரைப்பட உலகமும் தலைவரின் பெயரில் பிரமாண்டமான படம் ஒன்றைத் தயாரித்து வருகிறது. சினி மாஸ்கோப்பில் தயாராகும் கப்டன் பிரபாகரன்' என்று இப்படத்திற்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. தலைவரின் பெயருக்குள்ள மவுசை திரைப்படத்துறையினரும் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர் என்பதை இது காட்டுகிறதல்லவா?

### மாகாணக் கல்விப் பணிப்பாளர் தகவல்:

# பண்டத்தரிப்பு அலுவலகத்துக்கு 15 லட்சம் நிதி; யாழ். அலுவலகம் அதே கட்டிடத்திலேயே இயங்கும்

'இடைநிலை வகுப்புகளில் நாடகமும் அரங்கியலும் என்னும் பாடம் கற்பிக்கப்பட வேண்டும். இதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகின்றேன்.'

இவ்வாறு பண்டத்தரிப்பு கோட்டக்கல்வியதிகாரி திரு. இ. சிவானந்தன் வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்ட கல்வியதிகாரிகளின் விசேட கூட்டமொன்று நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை காலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு ஈ. ஜே. சற்குணராசா கலந்துகொண்டு கோட்டங்களின் கல்வி நிர்வாகப்பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

யாழ். கோட்டக்கல்வியதிகாரி திரு. சி. தியாகராசா இக்கூட்டத்திற் பேசுகையில் யாழ். மாவட்டப்பாடசாலைகள் அனைத்துக்கும் பயன் தரும்வகையில் யாழ். மத்திய கல்லூரி மைதானம் சீரமைக்கப்பட வேண்டுமென்று வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சு இதற்கு உதவ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

திரு. சற்குணராசா பதிலளிக்கையில் இக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாகவும் இதற்குரிய ஒழுங்குகளை மேற் கொள்வதாகவும் உறுதியளித்தார்.

யாழ் கோட்டக்கல்வி அலுவலகம் தொடர்ந்தும் யாழ் கல்வித் திணைக்களக் கட்டிடத்திலேயே இயங்கவேண்டுமெனவும் திரு. சற்குணராசா தெரிவித்தார். பண்டத்தரிப்புகோட்டக் கல்வி அலுவலகக் கட்டிடத்திற்கெனப் பதினைந்து இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் அதனைப் பயன்படுத்து மாறும் அவர் மேலும் கூறினார்.

கோட்டக்கல்வி அலுவலகங்கள் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துமாறும் திரு சற்குணராசா வலியுறுத்தினார் கோட்டக் கல்வி அதிகாரிகள் தங்கள் செயற்றிட்டங்கள் குறித்து இக் கூட்டத்தில் எடுத்துக் கூறினர்.

## சுவையான செய்திகள்

### 'கிஸ் அன்ட் டெல்'

அமெரிக்காவில் இப்பொழுது அதிகமாக விற்பனையாகும் புத்தகங்கள் வரிசையில் 'கிஸ் அன்ட் டெல்' என்ற புத்தகமும் சேர்ந்துள்ளது. இதன்பொருள் 'முத்தமிடு சொல்' என்பதாகும். பல பெரிய புள்ளிகளின் கடந்த கால வாழ்க்கையிலிருந்து திரைமறைவில் நடந்த பல 'பலான' விஷயங்கள் புத்தகம் முழுவதும் அல்வாவில் தெளிந்தமுந்திரிப்பருப்புபோலதெளிவிக்கப்பட்டிருக்கும். உதாரணத்திற்கு ஒரு சிறுகுறிப்பு- லானாடர்னர், ஒரு ஹொலிவுட் நடிகை. இவள் அடிக்கடி தன் மகளுக்கு எதிரிலேயே தன் காதலனுடன் கொஞ்சுவாள் விதவைத் தாயின் அட்டகாசம் பொறுக்காமல் லானாடர்னரை அவளுடைய மகளே கொன்றுவிட்டாள். லானாடர்னர் எந்த போசில் இருப்பாள், இருந்தாள் என்பதைப் பற்றிய விபரங்களை அவள் மகளே சொல்லுவது போல் கட்டுரை இருக்கும் சாம்பிளே திகட்டுகிறதா? அமெரிக்க சமாசாரமாயிற்றே.

### 'நாய் டிபார்ட்மென்ட்'

பம்பாய் மாநகரசபையில் வீதிகளில் திரியும் நாய்களை ஒழிப்பதற்கென்றே 'நாய் டிபார்ட்மென்ட்' என ஒரு திணைக்களம் ஸ்பெஷலாக ஏற்படுத்தியுள்ளனர். இதில் அதிகாரியாக இருந்த ஒருவர் நாய் ஒழிப்பிற்காக யார் நாயைப்பிடித்துக் கொடுத்தாலும் 50 ரூபா பரிசு தரப்படும் என்று ஒரு அறிவிப்புக் கொடுத்தார். இப்பொழுது இந்த அதிகாரி ரிட்டையர் ஆகிவிட்டார். ரிட்டையர் ஆன கையோடு ஒரு வான் வாங்கி இரவு நேரங்களில் பம்பாய் வீதிகளில் அநாதையாகத் திரியும் நாய்களைப் பிடித்து மாநகர சபையிடம் கொடுத்து பரிசு வாங்கி காலட்சேபம் நடாத்துகிறார். நாள் ஒன்றுக்கு 100 நாய்க்குக் குறையாமல் கிடைக்கிறதாம். பிழைக்கத் தெரிந்த மனுசன் அவர்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

### தெல்லிப்பழையில்

யாழ். ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் கலாநிதி கு. சிவப்பிரகாசம் நினைவுப் பேருரையை இன்று திங்கட்கிழமை மு. ப. 10 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நிகழ்த்த ஏற்பாடு செய்துள்ளது. கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பண்டிதர் க. சச்சிதானந்தன் பேருரை நிகழ்த்துவார்.

### கல்வியங்காட்டில்

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கம், சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சியாக, முத்தமிழ்ப் போட்டி ஒன்றை இன்று நடத்தவுள்ளது, இவ் முத்தமிழ்ப் போட்டியில் இப்பகுதியை சேர்ந்த பல மாணவ மாணவியர்கள் பங்கு பற்றுகிறார்கள் இப் போட்டி பல பிரிவுகளில் நடத்தப்படுகின்றது.



## முரசொலிக்கு வந்த கடிதம்

### யாழ். போதனா வைத்தியசாலையில் 'பிணம் தின்னி கழுகுகள்'

ஆசிரியர்
முரசொலி

எனது உறவினரான ப. பவானி (26) என்பவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 13. 04. 90 மாலை 6.30 மணிக்கு மரணமானார். உடன் மரண விசாரணை நடைபெறாததால் அடுத்த நாள் 14 ஆம் திகதி காலை மரண விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மரண விசாரணை அதிகாரி பிரேத அறைக்கு சென்று பார்த்த பொழுது உடல் குளிர்சாதனப் பெட்டிக்கு வெளியே போடப்பட்டிருந்தது. இதனை மரண விசாரணை அதிகாரி குறிப்பெடுத்துச் சென்று. விசாரணை செய்து உடலை கணவரிடம் ஒப்படைத்தார். பாரமெடுப்பதற்கு பார்த்தபொழுது குளிர்சாதனப் பெட்டியில் வைக்காததினால் உடல் பழுதடைந்திருந்தது. பிரேத அறையில் வேலை செய்பவர்கள் அதை துப்பரவு செய்ய வேண்டுமெனவும் அதற்கு 150 ரூபா வேண்டுமெனவும் கேட்டார்கள் நீங்கள் குளிர்சாதனப் பெட்டியில் இடமிருந்தும் வைக்கவில்லை. அதனால்தான் சடலம் பழுதடைந்தது என்று நாம் சொன்னபோது 'நாங்கள் செய்வதை நீங்கள் பாாக்க வேண்டும் - வேறு கதையிருக்கக் கூடாது வெளியே போ' என்றார்கள். குளிர்சாதனப் பெட்டியிருந்தும், அதில் இடமிருந்தும் அவதிப்பட்டு வருபவர்களிடம் பணம் பறிப்பதற்காக வேண்டுமென்றே இவர்கள் இப்படி சடலங்களை கெடவைக்கிறார்கள். யாழ். போதனாவைத்தியசாலையில் தினம் தொடரும் இந்த செயல்களைத் தட்டிக் கேட்க எவருமேயில்லையா?

சங்குவேலி — எஸ். பிறேமன்

### காத்தான்குளம் கிராமம் அதிகாரிகளால் கவனிக்கப்படுமா

ஆசிரியர்
முரசொலி

மன்னார் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காத்தான்குளம் கிராமம் அமைந்திருக்கின்றது. விவசாயத்தை முக்கிய தொழிலாகக்கொண்ட இக்கிராமத்தில் நாற்பது குடும்பங்கள் உள்ளன. கல்வித்துறையைப் பொறுத்தளவில் இக்கிராமத்து மக்களுக்கு இலகடிப்பிட்டிறோமன் கத்தோலிக்கப் பாடசாலை நல்ல சேவையை ஆற்றிவருகின்றது. ஆனால் போக்குவரத்து வசதிக் குறைவான கிராமமாக இது இருக்கின்றது. இக்கிராமத்து மக்கள் மன்னார், வவுனியா பிரதான வீதியில் உள்ள உயிலங்குளத்திற்குச் சென்றுதான் மற்றைய இடங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. உயிலங்குளம் நானாட்டான் வீதி படு மோசமாக உள்ளது. இப்பகுதிமக்கள் பலதேவைகளுக்காக மன்னார் நகரத்திற்குச் செல்ல வேண்டி இருப்பது குறிப்பிடத்தக்கது அநேகமான மக்கள் கால்நடையாக உயிலங்குளம் செல்கிறார்கள். பல ஆண்டுகளுக்குமுன்பு நடைபெற்ற பஸ் சேவையும் தற்போது நடைபெறுவதில்லை. நானாட்டான் வழியில் அமைந்துள்ளகாத்தான்குளம் வீதிகுன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. மழைக்காலத்தில் சேறும்சகதியுமாக உள்ளது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதி விடயமாகக் கவனம் எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம். போக்குவரத்துக் குறைபாடு மட்டுமின்றி சுகாதார வசதிக் குறைபாடும் இங்கு உண்டு ஒருசிறிய வருத்தம் என்றாலும் மன்னார் அல்லது முருங்கன் வைத்தியசாலைக்குச் செல்லவேண்டும். எனவே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இங்கு நிறுவப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

நானாட்டான் — ஆர். ஜேக்கப்

### யாழ். அரச அதிபர் உரை:

# மக்களின்தேவையைகவனிப்பது அரச ஊழியர்களின் கடமை

பொதுமக்களின் தேவைகளைக் கவனிக்கவே அரசாங்க அலுவலகங்களும், ஊழியர்களும் இருக்கின்றனர். இந்த நினைப்பு அரசாங்க உத்தியோகத்தர் அனைவர் உள்ளத்திலும் நிலைத்திருக்கும் வரை பொது மக்கள் அரசாங்க ஊழியரிடையே அழியா நல்லுறவு மிளிரும்.

இவ்வாறு எட்டுலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார். சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க. சிவசம்பு தலைமையில் திறப்பு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து உரையாற்றிய யாழ். அரசாங்க அதிபர் ''அலுவலகம் வரும் மக்களை நாம் விருந்தினரைப் போல அன்புடன் வரவேற்று அவர்கள் அலுவல்களை உடனுக்குடன் பூர்த்திசெய்து அனுப்புதல் வேண்டும்.

''இவ்விதம் இங்கிதமாக நடக்கவேண்டியது அரசாங்க ஊழியர் கடமை. இன்னொரு அலுவலகத்திற்கு நாம் நமது விடயம் ஒன்றிற்குச் செல்கின்றபோது அங்குள்ளவர்கள் எம்மை உதாசீனம் செய்தால், எம்மை இன்று போ நாளை வா என அலைக்கழித்தால் எங்கள் உள்ளம் என்ன செய்யும்? எப்படி நொருங்கும், திட்டும் என்று நீங்கள் நினைத்துக் கொள்வதன் மூலம் நாம் பிறரை சீண்டக்கூடாது அலைக் கழிக்கக் கூடாது என்ற ஞானோதயம் வரும்'' என்றார்.

# ரமழான் சிந்தனைகள்

## பிள்ளைகள் மீது பாசம் காட்டுங்கள்

ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் பேரக் குழந்தைகள் ஹஸன் (ரலி), ஹுஸைன் (ரலி) அவர்களில் இருவரில் ஒருவர் இருந்தார்கள். அவர்களை பெருமானார் (ஸல்) அவர்கள் வாரி எடுத்து அன்புடன் முத்தமிட்டார்கள் இதைப் பார்த்துக் கொண்டிருந்த அக்ரஃ இப்னு ஹாபிஸ் (ரலி) என்ற தோழர் "எனக்குப் பத்துப் பிள்ளைகள் இருக்கிறார்கள் அவர்களில், எவரையும் முத்தமிட்டது கிடையாது" எனக் கூறினார் அவரை பெருமானார் (ஸல்) அவர்கள் கடுமையாகப் பார்த்து, 'எவர் இரக்கம்காட்டவில்லையோ, அவரின் மீது இரக்கம காட்டப்படமாட்டாது'"என்று கூறினார்கள்.

ஒரு கிராமவாசி நாயகம் (ஸல்) அவர்களிடம், 'நீங்கள் பிள்ளைகளை அன்புடன் முத்தமிடுகிறீர்கள்; நாங்களோ அவ்வாறு செய்வதில்லை' என்று கூறினார். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள், "நான் என்ன செய்வேன்? அல்லாஹ் உமது உள்ளத்திலிருந்து 'ரஹ்மத்' எனும் அருட்கொடை (பாசத்தன்மை)யை எடுத்து விட்டான்" என்று கூறலானார்கள்.

தாகிப்

# இன்று நாள் எப்படி?

மேடம்: வாக்கு வசீகரம் பணப்புழக்கம், பெரியோருதவி, வாகனசுகம், உயர் பதவி, இனசன வருகை, மன மகிழ்ச்சி.

இடபம்: மனையலங்காரம், ஆடையாபரணச் சிறப்பு, பெரியோர் வருகை, பணவருவாய்.

மிதுனம்: வாகன இலாபம், வணிகர்கள் அகமகிழ்ச்சி, வெளியூர்ச் செய்தி, சகோதர வழி மகிழ்ச்சி.

கடகம்: தானதருமச் செயல், எண்ணியது நடக்கும், இளைய சகோதரருதவி, பணப்புழக்கம்.

சிங்கம்: சுகஜீவியம், பணச் செலவு, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

கன்னி: வாக்கு வசீகரம், விவாகநிச்சயம், தேடியவர் வருகை. புதுத்தொழில், புகழ் தேடிவரும்.

துலாம்: உயர்பதவி, உத்தமர்களுறவு, வாகன இலாபம், கடற்தொழில் வாகனத் தொழில் இலாபம்.

விருட்சிகம்: வாக்கு வசீகரம் வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம். புதிய தொழில். புண்ணிய வழிபாடு, மாமன் வழியுதவி.

தனுசு: பெரியோர் வருகை, அகமகிழ்ச்சி, விருந்தினர் வருகை, ஆபரணச்சிறப்பு.

மகரம்: உயர்பதவி, பணவருவாய், எண்ணியது நடக்கும். சுகஜீவியம், தேடியவர் வருகை.

கும்பம்: வாகன சுகம், வணிகர்கள் இலாபம், விவாக நிச்சயம், நீண்டநாட் பிணக்குத் தீரும்.

மீனம்: உயர்பதவி, இராஜ மரியாதை, வாக்குப்பலிதம், வணிகர்கள் இயந்திரத் தொழில் கடற்தொழில் மூலம் இலாபம்.

★ யாழ் சோதிடர்
ச. அரியநாயகம்

# ஆக்கிரமிப்புப் படை பற்றி விசாரணை வேண்டும்

### -நெடுமாறன் கோரிக்கை

இந்திய அமைதிப்படை இலங்கையில் செய்த கொடுமைகள் பற்றி விசாரிக்க பல கட்சிகள் அங்கம் வகிக்கும் விசாரணைக் குழு ஒன்றினை இலங்கைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் மத்திய அரசிடம் கோரிககை விடுத்துள்ளார்.

"இந்தியப்படை கடந்த இரு வருடங்களாக நடத்திய அட்டூழியங்களை இலங்கைத் தமிழ் மக்கள் எடுத்துச் சொன்னார்கள். யாழ்ப்பாணத்தின் மாநகரசபைக்கட்டிடம், வீரசிங்கம் மண்டபம், பொலிஸ் நிலையம், தபால் நிலையம் இப்படிப் பல கட்டிடங்களை குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர். அவற்றை நேரிற் பார்த்தேன்.

பல இடங்களில் பெண்கள் உட்பட பலரைக் கொலைசெய்துள்ளனர் மாணவர்களைத் தாக்கியுள்ளனர்,

கிறிஸ்தவ பாதிரிமார்கள், இந்து மதத் துறவிகளையும் தொல்லைப் படுத்தியுள்ளனர். அமைதிப்படை அமைதிப் படையாக நடந்துகொள்ளாமல் ஆக்கிரமிப்புப்படையாகத்தான் செயற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் கொரியா, காஸ்ரோ போன்ற நாடுகளுக்குச்சென்று இந்திய அமைதிப்படை சிறப்பாகச் செயற்பட்டு பாராட்டையும் பெற்று வந்தது. ஆனால் இலங்கை சென்ற அமைதிப்படை மனிதத் தன்மை இன்றி நடந்து இந்தியாவுக்குக் கெட்ட பெயரைத் தேடித் தந்துள்ளது," என்று திரு. நெடுமாறன் சென்னையில் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# கரையோர நகர்களை சேர்த்து கப்பல் சேவை

### தமிழக அரசு ஆராய்கிறது

கரையோரப்பகுதிகளில் முக்கிய நகரங்களை இணைத்து கப்பற்சேவை நடத்தும் யோசனை ஒன்று குறித்துத் தமிழக அரசு ஆராய்ந்துவருகின்றது.

இத்தகவலை சட்டசபையில் போக்குவரத்து அமைச்சர் திரு. எம். கண்ணப்பன் வெளியிட்டார்.

முதற் கட்டமாகச் சென்னை பாண்டிச்சேரி, கடலூர் ஆகிய இடங்களுக்கு இடையே கப்பல் சேவை நடக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசற் பிரச்சினையைத் தீர்க்கவே கப்பல்சேவை குறித்து முக்கியமாக ஆராயப்படுவதாகவும் ராமேஸ்வரம், தூத்துக்குடி, கன்யாகுமரி ஏனைய கரையோர நகரங்கள் ஆகியவற்றுக்கிடையே அச்சேவையை விஸ்தரிப்பது குறித்துப் பின்னர் ஆலோசிக்கப் படும் என்றும் அமைச்சர் கூறினார்.

# குமுறும் எரிமலை கொந்தளிக்கும் கடல்

### இந்நிலையில் பாரதம்-பாகிஸ்தான்

பாரதத்திற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் வெடிக்கும் நிலை முற்றி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜம்மு-காஷ்மீரை இணைத்துக் கொள்ள பாகிஸ்தானால் ஆயிரம் வருடங்களல்ல பத்துலட்சம் வருடங்கள் போராடினாலும் முடியாது என்று பாரத வெளிவிவகார அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் கூறியுள்ளார்.

லோகசபையில் அவர் பாகிஸ்தானை மிக வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

# மதவாச்சியில் கடத்தலைத் தடுக்க பொலிஸார் சோதனை

கடத்தல் பொருட்களைக் கண்டு பிடிக்கும்முகமாக மதவாச்சிப் பொலிசார் வடக்கிலிருந்து, கொழும்பு செல்லும் வாகனங்கள் மீது கடும் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். சில நாட்களுக்கு முன் வடபகுதியிலிருந்து சென்ற லொறி ஒன்றின் மீது சோதனை மேற்கொண்டபோது சுமார் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட இந்தியன் கடத்தல் பொருட்கள், துணிவகைகள் என்பன கைப்பற்றப்பட்டதை அடுத்தே இச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

# லிதுவேனியா தன் பொறுமை பேணும்

பிற நாடுகளில் பிரசாரம் செய்வது போன்று கொர்பச்சேவ் நடந்துகொள்ளவில்லையென்பதனை மேற்கு நாடுகள் உணர்ந்து கொள்ளுமென லிதுவேனிய ஜனாதிபதி திரு. வைடோடால் லெண்ட் பெர்கிஸ் தெரிவித்தார்.

நான்கு வாரங்களாக சோவியத்யூனியன் லிதுவேனியா மீது கையாளும் நெருக்கடியைத் தீவிரப்படுத்தப் போகிறது என அவர் கண்டனம் தெரிவித்தார்.

லிதுவேனியா பொறுமையிழக்காது. ஆகவே கிரெம்ளின் கடும் நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டாதென லிதுவேனிய ஜனாதிபதி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

# உரிய பத்திரங்கள் இருப்பின் பாஸ்போட் வழங்கலில் இனித் தாமதம் இல்லை

உரிய பத்திரங்கள் இருப்பின் நான்கு தினங்களுக்குள் கடவுச்சீட்டு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடவுச்சீட்டுப் பெறுவதற்காகக் காணப்பட்ட நீண்ட வரிசைகள் குறைந்து தற்போது நான்கு நாட்களுக்குள் கடவுச்சீட்டு பெறக்கூடியநிலை ஏற்பட்டிருப்பதாகவும், உரிய பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் மூன்றாவது தினமே கடவுச்சீட்டைத் தபாலில் சேர்க்கும் பணி ஆரம்பிக்கப்படுவதாகவும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களப் பிரதிக் கட்டுப்பாட்டாளர் திரு டி. ஜெயலத் தெரிவித்துள்ளார்.

# பணமெடுத்தல் தொகை 500 ரூபாவாக அதிகரிப்பு

உப அஞ்சல் அலுவலகங்களில் செய்யப்படும் கேட்டவுடனான பணமெடுத்தல்களின் எல்லை ரூபா 500 ஆக உடனடியாக அதிகரிப்பதற்கு தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னர் தேசிய சேமிப்பு வங்கியில் உப அஞ்சல் அலுவலகங்களின் மூலம் பணம் வைப்பு செய்தோர் ரூபா 300 மட்டும் பெறக்கூடியதாக இருந்தது. ரூபா 500 ஆக அதிகரிக்கப்படுவதன் மூலம் கிராமப்புற மக்கள் தங்கள் உடனடித்தேவைகளுக்காக உப அஞ்சல் அலுவலகங்களில் 500 ரூபாவை பெறக்கூடிய வாய்ப்பு உடன் ஏற்படவுள்ளது. (38)

# முதலிடம்

பூநகரி கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தினப் போட்டியில் பங்குபற்றிய ஐந்து நிகழ்ச்சிகளிலும் முதலிடத்தைப் பெற்று சாதனையை நிலை நாட்டியுள்ளது பூநகரி நல்லூர் அரசினர் வித்தியாலயம்.

இந்தஐந்து நிகழ்ச்சிகளும் மாவட்டப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை பெற்றுள்ளது. முதல் இடத்தைப் பெற்ற இப்பாடசாலை மாணவர்களது காத்தவராயன் இசை நாடகம் பலரது பாராட்டைப் பெற்றது.

பூநகரி ம. வியில் நடைபெற்ற மேற்படி போட்டியில் பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் கிளிநொச்சி கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. பொன். சபாபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். விழாச்செயலாளர் திரு. பொன்தில்லைநாதன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

### மீசாலையில் சம்பவம்

# ரயில் பாதையில் படுத்தவர் ரயிலால் மோதப்பட்டு மரணம்

ரயில் தண்டவாளத்தில் படுத்திருந்த இளைஞர் ஒருவர் தபால் ரயிலால் மோதப்பட்டு மரணமானார். இச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீசாலை புத்தூர்ச்சந்திக்கு அருகில் நடந்துள்ளது.

இறந்த இளைஞர் புகையிரதப் பாதையில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தபோதே ரயிலால் மோதப்பட்டதாகத் தெரியப் படுகின்றது.

இதேபோன்று புகையிரதப் பாதையில் தூக்கத்தில் இருந்த நபர் ஒருவர் தபால் புகையிரதத்தால் மோதப்பட்டு இறந்த சம்பவம் கடந்தசனிக்கிழமை காலை யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் நடந்தமைவாசகர் அறிந்ததே.

### வலி மேற்கு

# உ அ அலுவலகம் அமைக்க நிதி ஒதுக்கீடு கிடைத்தது

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு ஒரு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

சுழிபுரம் பிரதேசசபைக் காரியாலயத்துக்கு அருகாமையில் கட்டடம் அமையும் எனவும் இதற்கான கட்டடம் கட்டுவதற்குரிய ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சங்கானையிலுள்ள ஒரு தனியார் கட்டடத்தில் மிக நெருக்கடியான நிலையில் உதவி அதிபர் பணிமனை ஊழியர்கள் சிரமத்துடன் பணியாற்றி வருகின்றார்கள். (36)

கீரிமலை பகுதிக்கு

## அதிக உல்லாசப் பயணிகள்: வசதிகளை அதிகரிக்க கோரிக்கை

கீரிமலைப்பகுதிக்கு இப்போது மிகப்பெருந்தொகையான யாத்திரிகர்களும், உல்லாசப் பயணிகளும் வருகை தந்து கொண்டிருக்கின்றனர்.

உல்லாசப் பயணிகள் வந்து உல்லாசமாக நீராடி மகிழும் இவ்வேளையில், கேணிப்பகுதியில் உள்ள உடைகள் மாற்றுவதற்குரிய அறைகள் சுத்தமின்றியும், கதவுகள் பூட்டுகள் என்பன பழுதடைந்தும் மின்சாரம் இன்றியும் உள்ளன.

உல்லாசப் பயணிகள் பெருந்தொகையாக வருகை தரும் இக்கேணிப்பகுதியில் மல சலகூடவசதியில்லை, இதனால் இப்பகுதி அசுத்தமடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் நல்ல குடிநீர் வசதியும் இப்பகுதியில் இல்லை. (25)

கிளி, கண்டாவளைப் பகுதிகளில்

## காணிகளில் பற்றைக்காடுகள் விஷசந்துக்கள் குடியிருப்புக்களில்

கிளிநொச்சி, கண்டாவளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட குடியிருப்புக் காணிகளில் அதிகளவு பற்றைகள் வளர விடப்பட்டுள்ளதால் தற்போதைய காலநிலை காரணமாக விஷசந்துகளின் பெருக்கம் அதிகரித்து அவற்றின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

பற்றைகள் உள்ள பகுதிகளில் பாதசாரிகளும், குழந்தைகளும், பாதிப்புக்குள்ளாகும் நிலை உருவாகி வருகிறது. உடனடியாகப் பற்றைகள் உள்ள குடியிருப்புக் காணிகளில் வசிப்போர் துப்பரவு செய்து சுற்றுப்புறச் சூழல்களைப் பாதுகாக்க வேண்டும் என கிளிநொச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. எஸ். வேலுப்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார். (35)

## யாழ்-ஆழியவளை பஸ்சேவை வெற்றிலைக்கேணி வரை நீடிப்பு

இப்பகுதி பொதுஸ்தாபனங்கள் பொதுமக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க வட பிராந்திய போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலையினால் நடாத்தப்படும் யாழ்ப்பாணம் – ஆளியவளை பஸ் சேவை வெற்றிலைக்கேணிவரை நீடிக்கப்படவுள்ளது.

கோண்டாவில் சாலை இ.போ.ச உயரதிகாரிகள் குழு ஒன்று வெற்றிலைக்கேணி வரை பாதையைப் பார்வையிட்டு பஸ் சேவையை நடாத்த அனுமதி வழங்கியுள்ளது.

இதன்மூலம் ஆளியவளையில் இருந்து பல மைல் தூரம் கால் நடையாகச் சென்ற வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, நித்திய வெட்டை, போக்கறப்பு, கேவில் கிராம மக்களின் போக்குவரத்துக் கஷ்டம் ஓரளவு நீங்கியுள்ளது. (18)

## வலிவடக்கு அரச அதிபர் பிரிவில் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கம்

யாழ். மாவட்டத்தில் வீடமைப்புக்கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதன் முன்னோடி நிகழ்வாக, வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒரு வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த 11-ம் திகதி இடம் பெற்றது.

இக் கூட்டத்திற்கு மாவட்ட முகாமையாளர், உதவி முகாமையாளர் ஆகியோரும்கலந்து கொண்டனர். வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வீடமைப்புக்கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கி சிவமகாராசாவும், செயலாளராக சட்டத்தரணி கணேசலிங்கமும், பொருளாளராக ஆசிரியர் நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

வீடமைப்புக் கூட்டுறவுச்சங்கம் அமைத்தற்கான, யாழ். மாவட்டத்தில் முதலாவதாக நடந்த கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது (25)

### ரயில்பாதையில் உறங்கி பலி

புத்தூர் சந்தியில் ரயில் தடவாளத்தில் உறங்கிய நபர் ஒருவர் நேற்று அதிகாலை பரிதாபமாக ரயில் சில்லுக்கு இரையாகியுள்ளார் நேற்று முன்தினம் இதேபோன்ற சம்பவம் யாழ்நகரில் இடம்பெற்றது தெரிந்தது’

கல்வி...

சினைகளையும் கேட்டறிவார்.

வன்னித்தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்றஉறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டவர்

யாழ் முன்னாள்மேயர்காலஞ்சென்ற திரு. துரைராஜாவின் மகள் இவர் என்பது குறிப்பிடத்தக்கது (11)

## காலமானார்

### வேலுப்பிள்ளை அன்னபூரணம்

காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அன்னபூரணம் 15-04-90 அன்று காலமானார். அன்னார் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், செல்வரத்தினம் அன்னம்மா, கனகலிங்கம் ஆகியோரின் அன்புத்தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரிவயகள் 16-4-90 அன்று தில்லை மயானத்தில் நடைபெறும் இத்தகவலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. கணேசலிங்கம்

04161

# யாழ் சுங்கத்திணைக்களம் சரியாக இயங்காததால் பொருளாதாரம் பாதிப்பு

வட பகுதி மக்களின் பொருளாதார முன்னேற்றம் மோசமாக பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சுங்க திணைக்களம் ஒழுங்காக இயங்காத காரணத்தினாலே மேற்படிநிலை தோன்றியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது,

1984ம் ஆண்டுக்கு முன் வட பகுதியின் ஐந்து துறைமுகங்களில் சுங்கத்திணைக்களம் இயங்கி வந்தது,

யாழ் மாவட்டத்தில் தற்போது காங்கேசன் துறை யாழ்ப்பாணம் பகுதிகளில் மட்டுமே சுங்கத்திணைகளம் இயங்கஆரம்பித்துள்ளது, வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை பகுதிகளில் இருந்த சுங்கத்திணைக்கள கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளது,

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் சுங்கத்திணைக்களம் கட்டடமும் சேதமடைந்துள்ளது. யாழ் சுங்கத்திணைக்களம் தற்போது தற்காலிகமாக வேறுகட்டடத்திலேயே இயங்கிவருகின்றது. (03)

## இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்நிலையம் மூடப்படமாட்டாது

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையம் ஒருபோதும் மூடப்படமாட்டாது என்று திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய உதவி நிர்வாகி திரு. க. கருணாகரன் அறிவித்துள்ளார்.

இத் திறந்த பல்கலைக்கழக மேலும் வளர்வதற்குரிய சகல முயற்சிகளும் எடுக்கப் பட்டு வருவதாகவு’ தமிழ் மக்களுக்கு உயர்கல்வியை வழங்குவதற்கு இப் பிராந்திய நிலையம் தொடர்ந்து பாடுபட்டு வருமென்றும் அவர் தெரிவித்தார்

இவ்வாண்டு தொடங்கும் திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்தியநிலையத்தில்மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் இவ் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது தற்போது கோரப்பட்டுள்ளது கொம்யுட்டர் கல்விக்கு அதிகப்படியான விண்ணப்பங்கள் வந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.(36

## வன்னியில் புத்தாண்டு இம்முறை கோலாகலம்

வவுனியாவில் தமிழ் சிங்கள புத்தாண்டு குதூகலம் பட்டாசு கொளுத்தி மக்கள் புது வருடத்தினை கொண்டாடினார்கள்.

சுமகர் ஐந்து ஆண்டு இடைவெளிக்கு பிறகு வன்னி மக்கள் புத்தாண்டினை கொண்டாடினார்கள்.

ஆலயங்களுக்கு சென்ற மக்கள் பூஜைகளில் கலந்து கொண்டதுதான் குறிப்பிடத்தக்க அம்சமாகும் நண்பர்களும் உறவினர்களும் ஒருவருக்கு ஒருவர் புத்தாண்டு வாழ்த்துக் கூறி விருந்ோம்பலில ஈடுபட்டதும் வவுனியாவில் காணமுடிந்தது

இலங்கை வங்கியின் வவுனியாக்கிளை புத்தாண்டு தினத்தன்று திறந்திருந்தது. வாடிக்கையாளர்களுக்கு கைவிசேஷம் முகாமையாளர் திரு விஜெகதீசன் அவர்களினால் வழங்கப்பட்டது. மக்கள் வங்கியிலும் கைவிசேஷம் கொடுக்கப்பட்டது. (11)

யாழ். உ, அ அதிபர் உதைபந்தாட்டம்

## முரசொலி வெற்றிக் கேடயம் குருநகர் கழகம் சம்பியனானது

முரசொலி வெற்றிக் கேடயத்திற்கான மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி நேற்று யாழ் மத்திய கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது.

முரசொலிவெற்றிக்கேடயப் போட்டித் தொடரில் குருநகர் விளையாட்டுக் கழக சி அணியினர் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர்களுக்கு முரசொலி வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற கண் காட்சிப் போட்டிக்கு பிரதமவிருந்தினராக முரசொலி ஆளுநர் நாயகம் திரு எம் சிவராசா கலந்துகொண்டார்,

சிறப்பு விருந்தினராக வடகிழக்கு மாகாணவிளையாட்டுப் பணிப்பாளர் திரு. எஸ். மரியதாஸ் கலந்துகொண்டார், கண்காட்சிப் போட்டியில் கலந்து கொண்ட வீரர்களை கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம் பிரதமவிருந்தினருக்கும் சிறப்புவிருந்தினருக்கும் அறிமுகம் செய்துவைத்தார். (16) (03)

அன்னை...

கொடுமைகளை சித்தரிக்கும் ஊர்திகள் பலரது கவனத்தையும் ஈர்த்தது.

இவ்வெழுச்சி ஊர்வலத்தில் விடுதலைப்புலிகளின் தென்மராட்சி பொறுப்பாளர்தினேஸ் தென்மராட்சி மாணவர் பொறுப்பாளர் ரஞ்சன் அரசியல் பொறுப்பாளர் பாப்பா ராணுவப்பொறுப்பாளர் குணு மகளிர் பொறுப்பாளர் பாரதி, யாழ்மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் சாவகச்சேரி நகர மைதானத் தையடைந்ததும் அங்கு பொதுக்கூட்டம்ஒன்றும் நடைபெற்றது. கொதுக் கூட்டத்தில்பேசிய தினேஸ் கடந்த கால அடக்கு முறையினால் விடுதலைப்புலிகளுக்கும் மககளுக்கும் இடையில் நெருங்கிய உறவு ஏற்பட்டதை இவ்வூர்வலம் மூலம் அறியக்கூடியதாக உள்ளது என்றூர் வேறு பலரும் உரையாற்றினர்.

## மணல் அள்ளுவதற்கு தடை

தீவுப்பகுதியில் கட்டிடங்கள் கட்டுவதற்கு தேவையான வெள்ளை மணல் தற் தற்போது வடமராட்சிப் பகுதியில் இருந்ததும் அரியாலைப் பகுதியிலிருந்தும் கொண்டு வரப் படுகின்றது முன்னர் மண்கும்பான் அல்லைப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்தே தீவுப் பகுதிக்கு தேவையான மணலும்.

யாழ்ப்பாணப்பகுதிக்குதேவையான மணலும் எடுக்கப்பட்டுடனமண்கும்பான் மணல் தொடர்ந்து எடுக்கப்பட்டு வந்ததால் இப்பகுதி நன்னீர் உவர் நீராக மாறுமென நிபுணர்கள் கூறிய காரணத்தினால் மண்கும்பான் மணலுக்கு தடை விதிக்கப்பட்டது. தமிழீழவிடுதலைப்புலிகளினால் இத் தடை விதிக்கப்பட்டது முரசொலி வாசகர்கள் அறிந்ததே. (24)

### திருடன் பிடிபட்டான்

வண்ணை சிவன் கோவிலடியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று கொள்ளையடிக்கமுயன்றஒருநபர் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளார்’

செல்லச்சாமி என்பவர்வீட்டி மேற்படி கொள்ளை முயற்சி இடம் பெற்றுள்ளது கொள்ளையிட்ட நபர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்’(03)

## அதிர்ஷ்ட லாபச்சீட்டு முடிவுகள்

வட்டுக்கோட்டை கிழக்கு சர்வோதய சனசமூக நிலைய வளர்ச்சிக்காக 13.4.90ல் இழுக்கப்பட்ட அதிர்ஷ்ட லாபச்சீட்டில் பரிசு பெறும் இலக்கங்களின் விபரம் பின்வருமாறு:—

1ம் பரிசு: 473. 2ம் பரிசு: 1121, 3ம் பரிசு: 439

ஆறுதல் பரிசில்கள்: 475, 1390, 1418, 436, 428

க. நித்தியரத்தினம்
செயலாளர்

04162

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ், [பிறைவேட்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 16-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது